இந்து முஸ்லிம் ஒற்றுமை



செ.திவான்

ஆசிரியரின் 65–ஆவது நூல்

முதற் பதிப்பு : ஆகஸ்ட் 26, 2007

மறுமலர்ச்சி திமுக பொதுச்செயலாளர் தமிழர் தலைவர் திருமிகு வைகோ அவர்கள் மத ஒற்றுமையை, சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தி நெல்லையில்

உண்ணாவிரதமிருந்த தின வெளியீடு

கணினி வடிவமைப்பு : நான்சி கணினியகம், பாளையங்கோட்டை

பிழை திருத்தி உதவியவர் : அண்ணன் ஐ. சாமுவேல்

அச்சிட்டோர் : ஹமீது பிரஸ், திருநெல்வேலி டவுண்

காணிக்கை

இந்து – முஸ்லிம் – கிறிஸ்தவ இன்ன பிற மதத்தினரிடையே ஒற்றுமைக்காகப் பாடுபட்டவர்களுக்கும், பாடுபடுபவர்களுக்கும் பாடுபட இருப்பவர்களுக்கும் . . .

சுகைனா பதிப்பகம்,
106F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆ : 0462 - 2572665

இந்து - முஸ்லிம் ஒற்றுமை

'புனிதமான கங்கை நதி கிழக்கு நோக்கி ஓடுகிறது. நர்மதை மேற்கே செல்லுகிறது. மகாநதி தெற்கிலிருந்து வடக்கே செல்கிறது. பல நதிகள் பல திசைகளில் ஓடுகின்றன. எல்லாம் முடிவில் கடலில் கலக்கின்றன. சேரும் இடம் ஒன்றே; அவை எங்கு போனாலும் கடலும் அவைகளைச் சூழ்கிறது. அதைப் போல நாம் பல வழிகளில் இறைவனை வழிபடுகிறோம். பாதைகளில் வேற்றுமை உள; ஆட்கொள்ளும் வஸ்து ஒன்றே. பல வழிகளில் இறைவனை அடைய நாம் முயற்சிக்கலாம். ஆனால் வேற்று வழிகளில் செல்கையில் ஒற்றுமையை மறந்து கடவுளின் ஏகத்வத்தைக் கைவிடக் கூடாது.

- காஞ்சிப் பெரியவர்

ஜகக்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர
ஸரஸ்வதி ஸ்வாமிகள்

1950 டிசம்பர் 25-இல்
திருவிடைமருதூரில்

'ஒன்றே குலமும்; ஒருவனே தேவனும்'

- திருமூலர் திருமந்திரம், 2066

'யாதும் ஊரே; யாவரும் கேளிர்'

- கணியன்பூங்குன்றனார், புறநானூறு 192

'அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி'

- தாயுமானவர்

"அங்கும் இங்கும் என ஒண்ணா அகண்ட
பரிபூரணமாய் எங்கு நிறைந்த இறையே நிராமயமே"

- குணங்குடி மஸ்தான்

திருமறையும் திருநபியின் வழிமுறையும்

உங்களுக்கு உங்கள் மார்க்கம்;
எனக்கு என்னுடைய மார்க்கம்.

- திருகுர்ஆன் 109: 6

சீப்பின் பற்களைப் போல் மனிதர்கள்
அனைவரும் சமமானவர்களே"

- அண்ணல் நபி (ஸல்)

பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய் தொழில் வேற்றுமையான்

எல்லா மனிதர்களும் பிறப்பினால் ஒரே
மாதிரியானவர்களே

'All men that live are one in Circumstances of birth'

- திருக்குறள் 972

பல்வேறு சமயத்தினர் வாழும் பரந்த இந்தியாவில், மக்களிடையே ஒற்றுமை நிலவி, சமாதான சகவாழ்வு நிலைபெற்றிட, சமய ஒற்றுமையும், சமூக நல்லிணக்கமும் மிக மிக இன்றியமையாதவை ஆகும்.

விரும்பத்தகாத தென்காசி துயரச் சம்பவங்கள் நடைபெற்ற இந்த காலகட்டத்தில், கடந்த காலங்களில் இதே நெல்லைச் சீமையிலும், நாடெங்கும் இந்து - முஸ்லிம் ஒற்றுமை எந்த அளவிற்கு போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்தது என்பதனைச் சான்றுகளுடன் எடுத்துக்கூறும் சம்பவங்கள் இதோ ...

செப்பேடு தரும் சிந்தை மகிழ்ந்திடும் செய்தி

தென்காசியில் உள்ள அகமதுபேட்டையில் ஏற்றுமதி இறக்குமதிப் பொருளை வியாபாரம் செய்யும் மணியம் இசுமாயில் ராவுத்தர் உள்ளிட்ட இஸ்லாமிய வணிகர்கள் அனைவரும் குற்றாலம் குற்றாலநாதசுவாமி திருவிழாப் பூசைக் கட்டளைக்கும், திருநெல்வேலி காந்தியம்மனின் சிறுகாலைச் சந்திக் கட்டளைக்கும் கொடுத்த மகமைக் கொடையைப் பற்றிய செப்பேடு உள்ளது.

இந்தச் செப்பேட்டை எழுதியவர் மாடன் செட்டியார்; தானாதிபதி அம்மைநாதன் சாட்சிக் கையொப்பம் இட்டுள்ளார். முஸ்லிம்கள் சார்பில் இசுமாயில் ராவுத்தர் கையொப்பமிட்டுள்ளார். கோயில் கார்பாரு சந்திரகுமாருப் பிள்ளை செப்பேடு செய்து வைத்தார். இரண்டு செப்பேடு தயார் செய்து குற்றாலம் குற்றாலநாத சுவாமி கோயிலுக்கும், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய வணிகர்கள் கோயிலுக்கு நன்கொடை அளித்த ஆண்டு கி.பி. 1795. தென்காசி அகமது பேட்டை வணிகர்கள் மட்டும் அல்லாமல், செங்கோட்டை, புளியரை, பண்பொழி, கடையநல்லூர், சிவராமபேட்டை, சுரண்டை முதலிய ஊர்ச்சந்தையில் வியாபாரம் செய்யும் முஸ்லிம் வியாபாரிகளும் இம்மகமையை மாதா மாதம் அளித்தனர் என்றும் இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது.*

---

* தென்னிந்தியக் கோயில் சாசனங்கள், மூன்றாம் தொகுதி, முதல் பாகம், தி.நா. சுப்பிரமணியம் தொகுப்பு, (1955) எண் 1099, பக்கம் 1073 – 1074.

Annual Report on Epigraphy (A) 43 of 1946.

மெக்கன்சி ஆவணம் ஆர் 5371 – 5372 தமிழக அரசு கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை – 5.

விஜயநாராயணத்தில் வியத்தகு ஒற்றுமை விழா

திருநெல்வேலி மாவட்டம் தெற்கு விஜயநாராயணத்தில் ஆடி மாதம் 16-ஆம் தேதி ஜாதி மத வேறுபாடுகளைக் கடந்து அனைத்து மதத்தினரும் ஜாதியினரும் இங்கு கூடுகின்றனர். அவர்களை ஒருங்கிணைக்கும் சக்தியாக இக்கிராமத்தில் உள்ள செய்யது முஹம்மது மலுக்கு மேத்தப்பிள்ளை அப்பா தர்கா (சமாதி) உள்ளது. அங்கு நடைபெறும் கந்தூரி விழாவிற்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் ஏராளமானவர்கள் வருகின்றனர். மும்பையிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும்கூட இங்கு வருகின்றனர். கந்தூரி விழாவிற்காக வரும் முஸ்லிம்கள் தங்குவதற்காக இக்கிராமத்தில் வசிக்கும் தேவர் சமுதாயத்தினர் தங்களது வீடுகளை ஒதுக்கிக் கொடுக்கின்றனர். ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசமின்றி கிராமத்தில் உள்ள குடிசைகள், ஓட்டு வீடுகள், பங்களாக்கள் என அனைத்து வீடுகளிலும் இவர்கள் தங்குகின்றனர்.

செய்யது முஹம்மது மலுக்கு மேத்தப்பிள்ளை அப்பா தர்கா

ஆடி 16-ஆம் தேதி மட்டுமே திருவிழா என்ற போதிலும் அதற்குச் சில நாள்களுக்கு முன்பே இக்கிராமத்தில் வந்து பல முஸ்லிம் குடும்பங்கள் தங்குகின்றனர். அவர்கள் திரும்பிச் செல்லும் வரை கிராமத்தில் உள்ள தேவர் சமுதாயத்தினர் சகோதர பாசத்துடன் பழகுகின்றனர். அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்கின்றனர். அதோடு, இந்த கந்தூரி விழாவையும் தேவர் சமுதாயத்தினரே முன்னின்று நடத்துகின்றனர். விழாக் காலத்தில் கிராமத்தில் மதுபானம் அருந்துவதற்கும் சூதாட்டத்துக்கும் தடை விதிக்கப்படுகிறது. இதை மீறி மது அருந்தினால் ரூ. 250-ம் சூதாடினால் ரூ. 500-ம் அபராதம் விதிக்கப்படுகிறது. விழாக்கள் என்றாலே இளைஞர்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் பெண்கள் இலக்காவது உண்டு. ஆனால் இங்கு அதற்கு இடமில்லை.

ஆயிரக்கணக்கானோர் கூடும் விழாவாக இருந்த போதிலும் மக்களை ஒழுங்குபடுத்த காவல் துறையினர் எவரும் இல்லை. அந்த அளவுக்கு ஒழுங்குடனும், கட்டுப்பாட்டுடனும் விழா நடைபெறுகிறது. ஜாதி மதங்களைக் கடந்து ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து மனித நேயத்துடனும் சகோதர பாசத்துடனும் பழக முடியும் என்பதை தங்களுடைய செயல்பாடுகள் மூலம் தெற்கு விஜயநாராயணம் கிராம மக்கள் நிரூபித்து வருகின்றனர். (03.08.1998 தினமணியில் நண்பர் என். குருசாமி எழுதிய கட்டுரை)

பாண்டிய மன்னர்களின் பெயர்களை பிரியமுடன் சூட்டிக் கொண்ட முஸ்லிம்கள்

காயல்பட்டினத்தில் உள்ள முஸ்லிம் பெரியோர்கள் உதய மார்த்தாண்ட காதிரியார், அவுதுல் காபவு நயினா ஆலிம்முடி செண்பகராம முதலியார், செய்யது அகமது ஆனவீரபாண்டிய முதலியார்; 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த முஸ்லிம்கள் தங்கள் பெயர்களோடு உதயமார்த்தாண்டன், செண்பகராமன், பராக்கிரம பாண்டியன், வீரபாண்டியன் ஆகிய சேர, பாண்டிய மன்னர்களின் பெயர்களையும் சேர்த்துக் கொண்டனர். காயல்பட்டினத்தில் இருந்து வீரபாண்டிய பட்டினத்திற்குச் செல்லும் வழியில் மக்தூம் பள்ளிவாசல் உள்ளது. கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சேரன் உதயமார்த்தாண்டவர்மன் (1383 - 1444) இப்பள்ளியினை உதயமார்த்தாண்டப் பெரும்பள்ளிவாசல் என்று அழைத்தான். இவ்வூரில் இருந்த காஜியார் அபூபக்கரை 'உதயமார்த்தாண்ட காதியார்' என்றும் பெயரிட்டுப் பெருமைப்படுத்தினான்.

பசும்பொன் தேவர் திருமகனாருக்குப் பாலூட்டிய முஸ்லிம் தாய்

'இன பேதமின்றி தெய்வ நம்பிக்கையிலும் தேசிய ஒருமைப்பாட்டிலும் பிற்காலத்தில் இணையற்ற தெய்வீக தேசியப் பெருமகனாய் இயங்கிய தேவரவர்களை தாய்க்குத் தாயாய் இருந்து சிசுவிலிருந்தே பாலூட்டி வளர்த்தது ஒரு முஸ்லிம் தாய்.' (ஆர். சக்திமோகன் தொகுப்பு, தேசிய மாமகன் தேவர் இதயநாதம், இரண்டாம் பதிப்பு, 1981, மதுரை, பக். 7)

‘பசும்பொன் தேவர் திருமகனாரின் தாயார் இந்திராணி அம்மையார் பசும்பொன் தேவர் அவர்கள் பிறந்த 6-வது மாதத்தில் இறந்துவிட்டார். “அவர் இறக்கவே அவர் போல் ‘சாயல் உள்ள ஓர் முஸ்லிம் மாதரால் தேவர் திருமகனார் வளர்க்கப்பட்டார். 6 வருடங்களுக்கு முன் கயத்தாரில் அடியேனும் திரு. மூக்கையத் தேவர் அவர்களும் ஒரு பொதுக் கூட்டத்திற்குப் பேசப் போன சமயம் அந்த அம்மையாரும் அவ்வூரில் இருப்பதாகக் கேள்விப்பட்டு போய்ப் பார்த்தோம். தேவர் அவர்கள் உயிருடன் இருந்த காலத்தில் பல தடவைகள் அவ் அம்மையாரைப் போய்ப் பார்த்து புடவை, பழங்கள், பணம் முதலியன கொடுத்துள்ளார் என்று எஸ்.என். ரத்தினம் (துணைத் தலைவர், பார்வர்டு பிளாக், பசுமலை) தனது பசும்பொம் தேவர் அவர்கள் வாழ்க்கை வரலாறு கட்டுரையில் கூறியுள்ளார். (பண்டித ரத்னா என்.ஏ. வேலாயுதம், தீவிரவாதி, கட்சிச் சார்பற்ற கலை இலக்கிய அரசியல் மாத இதழ், முதல் ஆண்டு மலர் 1972, பக். 53).

இந்துக்களும் – உமறுப் புலவரும்

எட்டயபுரத்தில் சீறாப்புராணம் பாடிய உமறுப் புலவரின் அடக்கஸ்தலம் உள்ளது. திறந்தவெளி அடக்கஸ்தலத்திற்கு கட்டிடம் எழுப்பி சிறப்பித்தவர் பிச்சையாக் கோனார் ஆவார்.

எட்டயபுரத்தில் வாழும் யாதவர், தேவர் இன மக்கள் தம் பிள்ளைகளுக்கு உமறு என்று பெயரிடுகின்றனர். உமறுக் கோனார், உமறுத் தேவர், உமறம்மாள் என்ற பெயரில் இப்பகுதியில் பலர் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

மியான்பள்ளியும் ராணிமங்கம்மாளும்

திருநெல்வேலிக்கு அருகேயுள்ள மியான்பள்ளியில் செய்யது அப்துல் கரீம் மியான் வலி என்னும் மகானின் சமாதி (தர்கா) உள்ளது. இதற்கு ராணி மங்கம்மாள் மானியம் வழங்கியுள்ளார்.

ஊத்துமலை அரசர் வழங்கிய மான்யம்

நெல்லை மாவட்டம் வீராணத்தில் பள்ளிவாசலுக்கு சேகு சேர்வை என்பவர் மூலமாக மான்யத்தை கி.பி. 1776-இல் வழங்கியவர் ஊத்துமலை ஜமீன்தார் சின்ன நயினார்த் தேவர் என்ற மருதப்ப தேவர்..

வீரத்தலைவர் பூலித்தேவர் படையில் முஸ்லிம்கள்

இந்திய விடுதலைப் போரில் நெற்கட்டுஞ் செவல் மாமன்னர் பூலித்தேவருக்கு ஆதரவாக மூடமையா என்ற முஹம்மது மெயினாக் யுத்த களத்திலே முன்னணியிலே நின்றார். மூடேமியா என்ற பட்டாணித் தலைவரும் பூலித்தேவருக்கு ஆதரவாகப் போரிட்டார். போரில் வீர மரணமுற்ற மூடோமியாவை பூலித்தேவர் தனது மடியில் கிடத்தி மனம் வருந்தினார்.

ஆற்காடு நவாப் முகமது அலியின் அண்ணன் மாபூஸ்கான் தன்னுடன் இருந்தபோது தனது கோட்டைக்குள்ளே விடுதி கட்டிக் கொடுத்தவர் மாமன்னர் பூலித்தேவர்.

பர்கதுல்லா, பீர்முகம்மது வகையறாக்கள் பூலித்தேவரோடு தோளோடு தோள் நின்று நாட்டின் விடுதலைக்காக வெள்ளையரை எதிர்த்து நின்றார்கள்.

சிவானந்தருக்கு பாராட்டு நடத்திய மேலப்பாளையம்

16.10.1950-ல் நெல்லைக்கு விஜயம் செய்த சுவாமி சிவானந்தருக்கு மேலப்பாளையம் நகர்மன்றத்தின் சார்பாக, பாளையங்கோட்டை நூற்றாண்டு மண்டபத்தில் வரவேற்பும் பாராட்டு விழாவும் நடத்தி, பாராட்டுப் பத்திரம் வழங்கியவர் மேலப்பாளையம் வி.எஸ்.டி. முகம்மது இபுராகிம்.

பள்ளிவாசலைத் திறந்து வைத்த பெரியவர்கள்

திருநெல்வேலி ஜங்ஷன் பஜார் முஸ்லிம் சத்திரம் ஜிம்ஆ பள்ளிவாசல் கட்டிடத்தை 31.03.1934-இல் திறந்து வைத்தவர் திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவர் ஐ.சி.. ஈஸ்வரம்பிள்ளை. இந்த விழாவிற்குத் தலைமை தாங்கியவர் தாலுகா போர்டு தலைவர் வி.எம். கல்யாண சுந்தரம்பிள்ளை.

சுகந்தியைக் காப்பாற்றிய நஸ்ரின் சுல்தானா

1996; தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் தாலுகா சிறுத்தொண்டநல்லூர் கே.யூ. காசிமின் மகள் நஸ்ரின் சுல்தானா; மும்பையைச் சேர்ந்த பால்ராஜ் மகள் பா. சுகந்தி; ஏரலுக்கு தனது உறவினர் வீட்டுக்கு வந்த வேளையில் தாமிரபரணி ஆற்றில் குளிக்கச்

சென்றார். நீச்சல் தெரியாது; ஆழமான பகுதியில் அகப்பட்டார். உயிருக்குப் போராடிய பா. சுகந்தியை ஆற்றில் நீரில் இருந்து காப்பாற்றியது நஸ்ரின் சுல்தானா.

ஆற்காடு நவாப் நிறுவிய நெல்லை அனவரதர் கோயில்

ஆற்காடு நவாப் முகமதலியின் மூத்த சகோதரரும் தனாதிபதியுமான மாவஸ்கான் (1750 - 1760) நெல்லையப்பர் கோயிலின் மேலைச் சுற்று வெளியில் சிறிய கோயிலை அமைத்து, நெல்லையப்பரை அனவரதர் என்று போற்றியும், நெல்லையப்பர் கோயிலுக்கு நகைகளும் வழங்கினார்.

நெல்லையப்பர் கோவிலில் செய்கு தம்பிப் பாவலர்

மகாமதி சதாவதானி செய்குதம்பிப் பாவலர் ‘தேவாமிர்தப் பிரசங்க களஞ்சியம்’ ஆவார். ‘கம்பராமாயண சாய்பு’ என்று போற்றப்பட்டவர். 1930-களில் திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத்தில் ‘சைவம் வளர்த்த தமிழ்’ என்று மணிக்கணக்கில் முழங்கியவர்.

மதமாச்சாரியமில்லா மாண்பு

1923-இல் அரபுக் கதைகளை தமிழில் அச்சிட்டவர் க.வே. சொக்கலிங்க முதலியார். 1929-இல் விக்கிரமாதித்தன் கதையை வசன ரூபமாக வெளியிட்டவர் ப.வெ. முஹம்மது இப்ராஹிம் சாகிபு.

முதன்முதலில் தீபாவளி பட்டாசு வெடித்த பாபர்

தீபாவளிப் பண்டிகையின்போது முதன்முதலில் பட்டாசு வெடித்து மகிழ்ந்தவர் முகலாய மன்னர் பாபர். தீபாவளி கொண்டாட்டத்தில் தானும் கலந்து கொண்டு சிறப்பித்தவர் அக்பர். தீபாவளி பண்டிகையை அரசுப் பண்டிகையாக்கியவர் ஜஹாங்கீர் - ஷாஜகான்.

தளபதிகள்

மன்னர் அக்பரின் தளபதி இராஜா மான்சிங். இராணா பிரதாப் சிங்சின் தளபதி ஹக்கீம் கான்கர். சக்கரவர்த்தி ஔரங்கஜேப்பின் தளபதி இராஜா ஜெய்சிங் மராத்திய மாவீரர் சிவாஜியின் தளபதி சிஷ்தி மிஷ்ரி.

திலகரும் – ஜின்னாவும்

1908 ஜூன் 24 பம்பாய் கிரா போர்ட் மார்க்கெட்டில் ஸர்தார் கிருகத்தில் தங்கியிருந்தபோது, வெள்ளையர்களால் 'கேசரி' இதழின் ஆசிரியர் லோகமான்ய பாலகங்காதர திலகர் கைது செய்யப்பட்டார். பம்பாய் உயர்நீதிமன்றத்தில் அவருக்காக வாதாடியவர் காயிதே அஃலம் அமீரேமில்லத் முகம்மது அலி ஜின்னா.

விவேகானந்தரும் முஸ்லிம் ஊழியரும் (அனைவரும் எமது சகோதரர்கள்)

1890 சூலையில் பெரநாகூர் ஆஸ்ரமத்திலிருந்து சுவாமி விவேகானந்தர் யாத்திரை கிளம்பினார்; அகண்டானந்தருடன் பயணித்து 'அல்மோரா'வை அடைந்தார். பசியால் மிகவும் அப்போது களைத்து இருந்தார். சுவாமிகள் இருந்த இடம் முஸ்லிம்களின் அடக்கஸ்தலம். அதன் காவலர் தன்னிடம் வந்தபோது, அவரிடம், சுவாமி விவேகானந்தர் பேசவும் சக்தியில்லாதவராய், உண்ண ஏதேனுமுளதோ என சமிக்ஞை செய்ய, அந்த முஸ்லிம் கிழவர் "அடியேன் இடுகாட்டைக் காக்கும் முஸ்லிமாயிற்றே? யான் தங்களுக்கு உணவளிப்பதை ஏற்றுக் கொள்வீர்களா? என்று உள்ளன்புடன் சொன்னார். சுவாமி விவேகானந்தர். எச்சாதியனாயினென்ன? அனைவரும் எமது சகோதரர்கள் என்று மெல்லப் பேசினார்கள். இடுகாட்டுக் காவலரான முஸ்லிம் தன்னிடமுள்ள கோதுமை ரொட்டியை அளித்தார். சுவாமி விவேகானந்தரின் களைப்பைப் போக்கினார். (திரிசிரபுரம் தேசியக் கலாசாலைத் தமிழாசிரியர் உறையூர் எஸ்.வி. வரதராஜையங்கார் எழுதிய ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் விரிவான திவ்ய சரித்திரம், சென்னை, 1929, விலை ரூ. 4, பக். 221 -224).

காஞ்சிப் பெரியவரும் பாவா மரைக்காயரும்

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் தந்தையார் பறங்கிப் பேட்டையில் ஆசிரியராக இருந்தபோது கி.பி. 1898-இல் கல்வி பயின்றவர் பாவா மரைக்காயர். இளம் வயதில் காஞ்சிப் பெரியவரிடம் நன்கு பழகியவர்; இருவரும் நல்ல நண்பர்கள். தனது 48வது வயதில் காஞ்சிப் பெரியவர் பறங்கிப் பேட்டைக்கு விஜயம் செய்தார். அப்போது கடற்கரையில் உள்ள தம்முடைய வணிக ஸ்தலங்களைப்

பார்க்க வேண்டுமென்று, தனது விருப்பத்தை தெரிவித்தார் பாவா மரைக்காயர். 'கடற்கரை ஓரமாக பத்து மைல் தூரம் கடுமையான வெயிலையும் பொருட்படுத்தாது குழந்தை போல முஸ்லிம் வியாபாரியின் கோரிக்கையை ஏற்று நிறைவேற்றித் தந்தவர்' காஞ்சிப் பெரியவர்.

காஞ்சிப் பெரியவரும் – சென்னை முஸ்லிம் சங்கத்தினரும்

கும்பகோணத்தில் 1921-இல் நடைபெற்ற மகாமகத்தின் போது இருநூறுக்கும் மேற்பட்ட இஸ்லாமியத் தொண்டர்கள், சென்னை முஸ்லிம் சங்கத்திலிருந்து வந்து பணியாற்றினார்கள். இதனை அறிந்த காஞ்சிப் பெரியவர் இஸ்லாமிய இளைஞர்களை பட்டீச்சுவரத்திற்கு வரவழைத்து, உணவளித்து, அவர்களிடம் அவர்களின் தாய் தந்தையரைப் பற்றி விசாரித்து, மகிழ்ந்து, மனமுவந்து ஒரு வெள்ளிக் கோப்பையையும் பரிசாக அளித்தார்.

துலுக்க நாச்சியாரும் வைணவ ஆலயங்களும்

தமிழகத்தில் வி ணு கோவில்களில் துலுக்க நாச்சியார் வழிபாடு இருந்து வருகிறது. திருரங்கத்தில் இரண்டாம் பிரகாரத்தில் ஈசான்ய மூலையில் துலுக்க நாச்சியார் கோவில் உள்ளது. தினமும் ஆராதனையும் நைவேத்தியமும் ஆகிறது. ரொட்டி, வெண்ணெய், கயிலி போன்றவை சாத்துவித்து வழிபாடும் நடந்து வருகிறது.

மதுரை வண்டியூரில் துலுக்க நாச்சியார் கோவிலில் பெருமாள் தங்குகிறார். இந்துவும் இஸ்லாமியரும் இந்த மண்ணின் மைந்தர்கள். இந்தியத் திருநாட்டின் குடிமக்கள் என்றென்றும் ஒற்றுமையுடன் இருவரும் பகையின்றி பேதமின்றி வாழ்ந்து வந்தார்கள் என்பதற்கான அடிப்படை அழகர் - துலுக்க நாச்சியார் வழிபாடு அல்லவா!

திப்புசுல்தானும் பூரணய்யாவும்

தீரன் திப்புசுல்தானின் முதல் மந்திரி பூரணய்யா. ஸ்ரீரங்கப்பட்டின கோட்டையில் ரங்கநாதர் ஆலயமும், ஜும்ஆமஸ்ஜிதும் காட்சியளிக்கிறது. திப்புவின் சமூக நல்லிணக்கத்திற்கு சாட்சியம் தருபவைகள் அல்லவா! சிருங்கேரி சாரதா பீடத்திற்கு தீரன் திப்பு சுல்தானும், ஹைதர் அலியும் அளித்த தானங்கள் அவர்களது சமயப் பொறையின் சின்னங்கள் அல்லவா!

இந்து – முஸ்லிம் ஒற்றுமையின் சின்னங்கள்

சபரிமலை ஐயப்பன் ஆலயம் அருகே வாபர் பள்ளிவாசலும், திருப்பரங்குன்றம் ஆலயம் அருகே சிக்கந்தர் பாவா தர்காவும், பாளையங்கோட்டை தெற்குகடை வீதியில் ஸ்ரீ திரௌபதி அம்மன் கோயில் காம்பவுண்டில் ஹஜ்ரத் முத்தலிப் அப்பா தர்ஹாவும் இந்து - முஸ்லிம் ஒற்றுமையின் சின்னங்கள் அல்லவா!

தென் ஆற்காடு ஸ்ரீமுஷ்ணத்தில் மாசி மகத்தின் கிள்ளை என்ற ஊருக்குக் கடலாடச் செல்லும்போது அவ்வூரிலுள்ள முஸ்லிம் சமாதிக்குச் சென்று அடியவர்க்கு மரியாதையினை இந்துக்கள் இன்றளவும் அளித்துச் செல்வது நடந்து வருகிறது.

நேருவும் முபாரக் அலியும்

தனது 12-வது வயது வரையில் முஸ்லிம் பள்ளிக்கூடத்தில் படித்தவர் மோதிலால் நேரு. அவரிடம் கணக்கராக இருந்தவர் முன்ஷி முபாரக் அலி. மோதிலால் நேருவின் பிள்ளையான பண்டித ஜவஹர்லால் நேரு முபாரக் அலியிடம் வீரக்கதைகள் கேட்பார். விடுதலை இயக்கத்தின் வித்தினை இளம் வயதில் நேருவின் இதயத்தில் விதைத்தவர் நேருவின் குடும்ப ஊழியர் முன்ஷி முபாரக் அலி.

இராஜாராம் மோகன்ராயும் இரண்டாம் அக்பரும்

இராஜாராம் மோகன்ராய் இந்தியாவின் சமுதாயச் சீர்திருத்தச் செம்மல்களில் ஒருவர். அவர் வெளிநாடு செல்ல அவருக்குத் தகுதியையும் கொடுத்து பண உதவிகளும் அளித்தது முகலாய மன்னர் இரண்டாம் அக்பர்தான்.

டி.வி.எஸ்.சும் – ஷா நவாஸ்கானும்

தமிழகத்தில் டி.வி.எஸ். நிறுவனத்தின் முதல் பஸ் போக்குவரத்து தஞ்சாவூரிலிருந்து புதுக்கோட்டைக்குச் செல்லும் வழித்தடத்தில் ஓடியது. இதனைத் துவக்கிய டி.வி.எஸ். சுந்தரம் அய்யங்காரிடம் கூட்டாக முதல் போட்டு தொழிலைச் செய்தவர் யார் தெரியுமா? ஷா நவாஸ்கான் என்ற முஸ்லிம்தான்.

புலவர்களும் சமய ஒற்றுமையும்

தம்மை நாடி வந்த படிக்காசுப் புலவருக்கும், நமச்சிவாயப் புலவருக்கும் வாரி வழங்கிய வள்ளல் சீதக்காதி. தஞ்சாவூர் அட்டாவதானி இராமசாமிக் கவிஞரின் நண்பர் மு.றா. இபுராகிம் சாகிப் புலவர். சேதுநாடும் செந்தமிழும் போன்ற பல நூல்களைத் தந்த சேது சமஸ்தான வித்வான் ரா. இராகவையங்காரின் நெருங்கிய நண்பர் சைய்யது முஹம்மது ஆலிம் புலவர்.

நாமக்கல் கவிஞர். வெ. ராமலிங்கம்; தமிழகத்தின் ஆஸ்தான கவிஞராய் இருந்தவர். (இவர் எழுதிய கதை தான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நடித்த மலைக்கள்ளன் படம் ஆகும்). நாமக்கல் கவிஞரை இளம் வயதில் தனது மடி மேல் இருத்தி இனிய பலகாரங்களைத் தந்தும் உணவூட்டியும் மகிழ்ந்தவர் முஸ்லிம் மாதா ஒருவர்.

தஞ்சை பெரிய கோவிலும் முஸ்லிம்களும்

1997 ஜுன் மாதத்தில் தஞ்சைப் பெரிய கோவிலில் ஏற்பட்ட விபத்தின்போது 40 பேர் இறந்தனர். அந்த விபத்தின் போது 80 உயிர்களைக் காப்பாற்றிய பெருமை தஞ்சை மாவட்ட முஸ்லிம் லீக்கைச் சாரும். தஞ்சை மாவட்ட செஞ்சிலுவைச் சங்க கௌரவ செயலாளர் கோவி. ராஜமகேந்திரன் தஞ்சை மாவட்ட முஸ்லிம் லீக் தலைவர் ஹாஜி எம்.ஏ., குலாம் மைதீனுக்கு முஸ்லிம்களின் சேவைகளைப் பாராட்டி கடிதம் எழுதினார்.

மதங்களை மறந்த நட்பு

பழம்பெரும் இஸ்லாமிய நூலான ‘மிகுராசு மாலை’ பாடியவர் ஆலிப்புலவர்; இவரது அடக்கஸ்தலம் பாளையங்கோட்டையில் உள்ளது. இவரது நூலை கி.பி. 1589-இல் அரங்கேற்றம் செய்திட உதவியவர் நாகர்கோவில் கோட்டாறு பாவாடைச் செட்டியார்.

தமிழில் நான்கு காப்பியங்கள் பாடிய காயற்பட்டினத்து சேகனாப் புலவரின் நெருங்கிய நண்பர்கள் திருத்தணிகை பார்க்க வேண்டுமென்று, தனது விருப்பத்தைத் தெரிவித்தார் பாவா சரவணப் பெருமாள், சபாபதி முதலியார், கொழும்பு வேலுப்பிள்ளை போன்றபெருமக்கள் தான். கோட்டாறு ஞானியாரப்பா மீது நூல்கள் பாடியவர் கொட்டாம்பட்டி கருப்பையா பாவலர்தான்.

சாகாத உணர்வுகள்; சரித்திரமாகும் நினைவுகள்

1996; ஆந்திர மாநிலம்; கலவரம் மூளுதல். முஸ்லிம் தம்பதியர் விரட்டப்படுகின்றனர், இரத்தக் காயங்களுடன் தஞ்சம் புகுந்த அவர்களைக் காப்பாற்றியது கே. விஜயகுமாரி என்ற சகோதரி. அதே நாளில், ஹைதராபாத்தின் முகல்புரா பகுதியில் தனது இந்து எஜமானருடன் நடந்து சென்றார் டிரைவர் முகம்மது கௌஸ். கும்பல் தாக்குகிறது. தனது உயிரைப் பணயம் வைத்து தனது எஜமானரைக் காப்பாற்றுகிறார்.

கே. விஜயகுமாரியும், முகம்மது கௌசும் 20 ஆயிரம் ரொக்கப் பரிசான கபீர் விருதை அந்த ஆண்டு பெற்றது சரித்திரமாகும்.

பள்ளிவாசலுக்கு நிலம் வழங்கிய ஹிந்து மன்னர்கள்

அருப்புக்கோட்டையில் அமைந்துள்ள முஸ்லிம்கள் தர்ஹாவிற்கு நிலம் கொடுத்தவர்கள் நாயக்கர்கள். இந்த குடும்பத்தினர் ‘பள்ளிவாசல்’ எனும் அடைமொழியைப் பெற்றுள்ளனர். இந்தப் பரம்பரையில் ‘பள்ளிவாசல் சேதுராம நாயக்கர்’ என்பவர் வாழ்ந்து வருகிறார்.

நாகூர் தர்காவிற்கு அச்சுதப்ப நாயக்கர் முப்பது வேலி நிலத்தை மான்யமாக வழங்கியுள்ளார். முதலாம் துக்கோசி நாகூர் தர்காவிற்கு நிலம் வழங்கியுள்ளார். மன்னர் பிரதாப்சிங் நாகூரில் 131 அடி உயரமுள்ள கோபுரத்தை (மினரா) அமைத்துக் கொடுத்தார். நாகூர் தர்காவில் போர்த்தப்படும் போர்வை சென்னை வணிகர் பழனியாண்டிப்பிள்ளை என்பவரால் ஆண்டுதோறும் அனுப்பி வைக்கப்படுகிறது.

பாண்டிய மன்னர் படையில் முஸ்லிம் வீரர்கள்

ஜாதவர்மன் சுந்தரபாண்டியனின் தலைமை அமைச்சர் சையத் தகிய்யுத்தீன். இவரது சகோதரர் சையித் ஜமாலுத்தீன் தளபதி; அலாவுதீன் கில்ஜியின் தளபதி மாலிக்காபூர் தென்னகத்தின் மீது படையெடுத்து வந்தபோது மாலிக்காபூரின் படையை எதிர்த்து பாண்டிய மன்னரது படையில் உக்கிரமாகப் போர் புரிந்தவர்கள் முஸ்லிம் தளபதியும் வீரர்களும்.

சேதுபதியும் ஜவ்வாதுப் புலவரும்

விஜய ரகுநாதசேதுபதியின் அன்பைப் பெற்றவர் ஜவ்வாது புலவர். வண்ணாரவயல், காவத்தன் என்னும் இரு சிற்றூர்களை பரிசிலாக வழங்கியவரும் சேதுபதி மன்னர்தான்.

காந்தியும் – கபார்கானும்

திருகுர்ஆனில் ஞானத்தை நாடிய கான் அப்துல் கபார்கானும், பகவத் கீதையே தமது ஜீவாதாரமாகக் கொண்ட அண்ணல் காந்தியடிகளும் சேவாக் கிராமத்தில் ஒரே குடிசையில் ஒன்றுபட்டு இருந்தார்கள். தியானபவான் - ஜமாலி சுல்தான் என்ற இரண்டு மகான்கள் சாகும் வரையில் தோழர்களாகவேயிருந்தார்கள். பாவா என்ற முஸ்லிம் மகான் ஒரு இந்து மகானின் சிஷ்யர். பாபா ஷஹாரு என்னும் ஹிந்து மகான் ஒரு முஸ்லிம் மகானின் சிஷ்யர்..

1925- இல் ‘சிவவாக்கியம்’ என்னும் நூலை வெளியிட்டவர் ப. முஹையிதீன் பிச்சை சாய்பு.

தென்காசி ஞானமேதை பீர்முகமமதப்பாவும் தர்மகர்த்தா வெங்கிட ராமசாஸ்திரியும்

17-ஆம் நூற்றாண்டு; தென்காசியில் வாவாஞ்சியின் மகன் சிறு மலுக்கர். அவரது பிள்ளை ஞானமாமேதை பீர் முஹம்மதப்பா (ரலி) (இவர்களது அடக்கஸ்தலம் தக்கலையில் உள்ளது) கவிச்சக்கரவர்த்தி கம்பரைப் போல் 18,000 பாடல்களைத் தமிழில் பாடியவர்.

தென்காசி காசி விஸ்வநாதசுவாமி ஆலயத்தின் தர்மகர்த்தா வெங்கிடராம சாஸ்திரி; சிறுமலுக்கர் அவரது நண்பர். வெங்கிட ராமசாஸ்திரியின் மகனும், சிறுமலுக்கர் மகனான தமிழ் ஞானக்கடல் பீர் முஹம்மதப்பாவும் இணை பிரியாத நண்பர்கள். தென்காசி தெப்பக்குளத்தில் பாலகர்கள் இருவரும் மதபேதமின்றி சென்று குளித்து மகிழ்ந்தனர். ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை அன்று நிலைத்து நின்றது. என்றும் நிலைத்து நிற்கட்டும்!

இந்து - முஸ்லிம் ஒற்றுமை பேணுவோம்!
இந்து - முஸ்லிம் ஒற்றுமை காத்திடுவோம்!

******